தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 3, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 பிப்ரவரி 15, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு."

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும், நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

பள்ளிக் கட்டடம்

***49972—திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் ஒன்றியம், முளையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[2024 பிப்ரவரி 15

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நத்தம் ஊராட்சி ஒன்றியம், முளையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை 520 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு எல்லப்பட்டி, கட்டபுளிப்பட்டி, சின்னமுளையூர், ராவுத்தம்பட்டி மற்றும் எருமநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களிலிருந்து உயர் கல்வி பயில மாணவர்கள் வருகின்றனர். ஒரே சுற்றுச்சுவருக்குள் ஆரம்பப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

ஒன்று முதல் 5 ஆம் வகுப்புகள் வரை 6 வகுப்பறைகளும், 6 முதல் 10 ஆம் வகுப்புகள் வரை எட்டு வகுப்பறைகளும் உள்ளன. நத்தம் சட்டமன்ற உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்களின் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2022–2023–லிருந்து ரூ.26.60 இலட்சம் மதிப்பீட்டில் முளையூர் ஆரம்பப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்காக 17–12–2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 4–1–2023–ல் பணிக்கான உத்தரவு வழங்கப்பட்டது. கட்டடம் முழுமையாக முடிக்கப்பட்டு தற்போது வண்ணம்பூசும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் 10 நாட்களுக்குள் பணி முழுமையாக முடிக்கப்பட்டு, வகுப்பறைகள் பள்ளிக் கல்வித் துறையிடம் ஒப்படைக்கப்படும். இப்பள்ளியில் புதிதாகக் கட்டப்படும் இரண்டு வகுப்பறைகளையும் சேர்த்து மொத்தம் 16 வகுப்பறைகள் இருக்கும். இது 520 மாணவர்கள் பயில்வதற்குப் போதுமானதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, ரெங்கப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, குன்னத்துப்பட்டியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பழுதான வகுப்பறைகள் இடிக்கப்பட்டு, கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக மாணவர்கள்

2024 பிப்ரவரி 15]

மரத்தடியில் பாடம் படித்து வருகின்றனர். எனவே, பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதி புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2023 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பழுதடைந்த பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்காக ஏறத்தாழ ரூ.800 கோடி ஒதுக்கீடு செய்து 3,400 ஆரம்பப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக அவை முழுமையும், அதாவது 6,000 வகுப்பறைக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நம்முடைய துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடிக்கப்பட்ட வகுப்பறைகளைப் புதிதாகக் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். புதிய வகுப்பறைகளைக் கட்டுவதற்கு அரசு நிச்சயம் ஆவன செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.*

டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டமான்ஊரணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுமார் 150–க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அங்கிருந்த பழமைவாய்ந்த கட்டடம் தற்போது இடிக்கப்பட்டுள்ளது. தற்போது மாணவர்களுக்குப் போதுமான கட்டட வசதி இல்லை. கறம்பக்குடி ஒன்றியம், வலங்கொண்டான்விடுதி ஊராட்சி, மீனம்பட்டி நடுநிலைப் பள்ளியில் சுமார் 350–க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேற்கண்ட பள்ளியில் பழமைவாய்ந்த கட்டடங்கள் இடிக்கக்கூடிய சூழ்நிலையில் உள்ளன. தற்போது 2 வகுப்பறைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. ஆகவே, மாணவர்களின் நலன் கருதி மேற்கண்ட இரண்டு பள்ளிகளுக்கும் புதிய கட்டடங்களைக் கட்டித் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

[2024 பிப்ரவரி 15

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: ஏற்கெனவே நான் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்தபடி, கொரோனா காலத்தில் பழுதடைந்த—30 ஆண்டுகள், 40 ஆண்டுகளுக்கு முன்னால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட ஓட்டுப் பள்ளிக் கட்டடங்கள், பெரும்பாலும் நிறைய பழுதடைந்திருக்கின்றன. கிட்டத்தட்ட 58 ஆயிரம் கட்டடங்கள் இருக்கும். அதில் 13 ஆயிரம் வகுப்பறைகள் கண்டறியப்பட்டு, படிப்படியாக அவற்றைச் செப்பனிடுவதற்காக, இந்த அரசு பொறுப்பேற்றவுடனே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு, முதல் ஆண்டு 800 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். அதேமாதிரி, உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 1,200 வகுப்பறைகள் கட்டுவதற்கு 250 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் படிப்படியாக கல்வித் துறைக்குச் செய்ய வேண்டிய பணிகள் காலதாமதமானாலும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டிருக்கிறார். இப்போது வகுப்பறைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பள்ளியின் நிலை குறித்து அறிந்து, இந்த ஆண்டு நிச்சயமாக அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என பல பள்ளிகளில் கட்டடங்கள் இடிந்த நிலையிலும், வகுப்பறைகள் இல்லாத இடங்களில் மரத்தடியிலும் மாணவர்கள் படிக்கின்ற சூழல் இருப்பதால், அதைப் பட்டியலிட்டு நாங்கள் கல்வித் துறைக்குக் கொடுத்திருக்கிறோம். ஒன்றிரண்டு என்று குறிப்பிட்டுச்

2024 பிப்ரவரி 15]

சொல்வதற்கில்லை. நிறைய கட்டடங்கள் பழுதடைந்துள்ள காரணத்தால் அந்தப் பட்டியலை ஏற்றுக்கொண்டு, வகுப்பறைகளைக் கட்டித் தர வேண்டும். அதிலும் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவிகள் அதிகம் படிக்கின்றனர்; அவர்களுக்கு கழிப்பறைகள் இல்லை; அந்தப் பட்டியலின்படி கழிப்பறைகள் கட்டுவதற்கும், சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் மிக விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே பழுதடைந்த நிலையில் இருப்பவையெல்லாம், மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால், அவற்றை முழுமையாகக் கண்டறிந்து அந்தக் கட்டடங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. பழுது நீக்கினால் சரியாக இருக்கும் என்கிற கட்டடங்களை, ஏறத்தாழ 8,500 பள்ளிக்கூடங்களைத் தேர்வு செய்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனே, அவற்றிற்கு 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். அவற்றில் 2,300 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 100 schools-தான் மீதம் இருக்கின்றன. இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பள்ளிகளின் பட்டியல் இருக்கின்றது என்று சொல்கிறார். நிச்சயமாக அதை நீங்கள் கொடுக்கலாம். அதை மீண்டும் நான் ஆய்வு செய்யச் சொல்கிறேன். நாங்கள் ஆய்வு செய்கின்றபோது, எந்தெந்தப் பள்ளிகள் புதிதாகக் கட்டித்தரப்பட வேண்டுமோ அவற்றைக் கட்டித் தருவதற்கும், பழுதடைந்த கட்டடங்களைக் கொண்ட பள்ளிகளையும் நாங்கள் கணக்கெடுத்துவிட்டோம். அவர்கள் கணக்கெடுத்து, ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் என மொத்தம் 8,500 பள்ளிகள் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அப்பள்ளிகளுக்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறதோ, அவ்வளவு நிதியையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்தார்கள். இப்பணிகளுக்கு 190 கோடி ரூபாய் என மதிப்பீடு கொடுத்தார்கள். அந்தப் பணிகள் அத்தனையும் முடிக்கப்பட்டிருக்கின்றன. Comprehensive School Infrastructure Development Scheme-ல் fund கொடுத்திருக்கிறார்கள். இதுபோக,

இந்த ஆண்டு நீங்கள் பெண்ணாகரம் தொகுதியில் உள்ளதைக் குறிப்பிட்டுச் சொல்கிறீர்கள். எங்கள் துறையினுடைய இயக்குநர் அவர்கள் அமர்ந்திருக்கிறார். நான் அவர்களை அழைத்துப் பேசி, அங்கு சென்று ஆய்வு செய்யச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில், 1969 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியக் கட்டடம் இருக்கிறது. அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்திருப்பதால், மழை பெய்தால் நீர் ஒழுகுகிறது. அந்தக் கட்டடத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: கட்டடம் கட்டித் தர வேண்டுமா, பழுதுநீக்க வேண்டுமா என்பதை ஆய்வு செய்ய நம்முடைய துறையில் நிபுணர்கள், பொறியாளர்கள் இருக்கிறார்கள். பொறியாளர்கள் பார்த்துவிட்டு பழுதுநீக்க வேண்டுமென்றால் உடனே செய்யச் சொல்கிறேன். நாளைகூட செய்யச் சொல்கிறேன். ஆனால், முழுமையாக இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்றால்—எல்லோருமே இருக்கின்ற பள்ளிகளை இடிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு நிதியாதாரங்கள் முழுமையாகத் தேவை. அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். 58,000 பள்ளிக் கட்டடங்கள் இருக்கின்றன. அவை படிப்படியாகக் கட்டப்படும். Union office-ஆ? Union office நிறைய கொடுத்திருக்கிறோம். நீங்கள் சொல்லியிருப்பது பஞ்சாயத்து Union office-ஆ? கண்டிப்பாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார், மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.